தமிழ் மொழிப்பெயர்ப்பு

RG/NB/01/சுற்றுநிருபம்

2022.01.03

உள்ளக சுற்றுநிருபம் : 01/2022

அனைத்துக் காணிப்பதிவாளர்களுக்கு,

**குத்தகை உறுதி மற்றும் ஈட்டுக்காக முத்திரைக் கட்டணம் செலுத்துதல்**

1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க முத்திரை தீர்வை சட்டத்தின் 22 ஆம் பிரிவு மற்றும் நொத்தாரிசுக் கட்டளைச் சட்டத்தின் 31 (6), (7) பிரிவுகளுக்கு இணங்க நொத்தாரிசினால் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுக்காக உரிய முத்திரைக் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும். முத்திரைக் கட்டணத்தின் கீழ் ஆவணங்களுக்காக உரிய விதம் முத்திரைக் கட்டணம் செலுத்தப்படவில்லையாயின் அவ்வாறான ஆவணங்களினை பதிவு செய்தல், காணிப்பதிவாளரினால் தள்ளுபடி செய்ய இயலும் என ஆவணங்கள் பதிவு செய்தல் கட்டளைச் சட்டத்தின் 36(2) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

02. ஆவணங்களுக்காக முத்திரைக் கட்டணங்களினை செலுத்துதல் சம்பந்தமாக சட்ட ஒழுங்குவிதிகள் இருந்தாலும் சில நொத்தாரிசுகள், தன்னால் எழுதி உறுதிப்படுத்தப்படும் ஆவணங்களுக்காக உரிய விதம் இரண்டாவது பிரதிகளில் முத்திரைக் கட்டணத்தினை செலுத்தாமை எனக்கு அறிக்கையிடப்பட்டுள்ளது. இது அரசாங்கத்திற்கு செலுத்தப்பட வேண்டிய வருமானம் இல்லாது போதல் போலவே பொது மக்களுக்கு அந்த ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளினை வழங்குதல் எமது திணைக்களத்திற்கு சிக்கலாக உள்ளது.

03. இந்த நிலைமையினை குறைத்துக் கொள்வதற்காக இதற்கு முன்னர் 03/2021 இலக்கத்தின் கீழான சுற்றுநிருபம் என்னால் வழங்கப்பட்டது. இறைவரி பணிப்பாளர் நாயகம் அவர்களின் கணக்கிற்கு வரவு வைக்குமாறு சட்டரீதியான ஆவணங்களுக்காக முத்திரைக் கட்டணம் செலுத்த வேண்டிய சந்தர்ப்பங்களில் இரண்டாவது பிரதிகளுக்கு முத்திரைக் கட்டணம் செலுத்தப்படும் பற்றுச்சீட்டின் பிரதி அல்லது உரிய நொத்தாரிசினால் உண்மைப் பிரதி என உறுதிப்படுத்தப்பட்ட அந்த பற்றுச்சீட்டின் போட்டோ பிரதியினை ஆவணங்களினை பதிவு செய்வதற்காக சமர்ப்பிக்கும்பொழுது மூலப் பிரதியுடன் இணைத்து கையளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்கின்றேன்.

04. உரிய முத்திரைக் கட்டணத்திற்காக இரண்டாவது பிரதியில் முத்திரை ஒட்டப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில், அதன் இரண்டாவது பிரதியின் பிரதி நொத்தாரிசினால் உண்மைப் பிரதி என உறுதிப்படுத்தி அதன் மூலப்பிரதியுடன் பதிவிற்காக சமர்ப்பித்தல் வேண்டும்.

05. அந்த தேவையினைப் பூர்த்தி செய்யாத ஆவணங்கள் சம்பந்தமாக ஆவணங்கள் பதிவு செய்தல் கட்டளைச் சட்டத்தின் 36(2) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒப்பம்/டப்ளியூ.எம்.எம்.பி.வீரசேகர

பதிவாளர் நாயகம்

பிரதிகள்

| | | |
|---|---|---|
| 01. | மேலதிக பதிவாளர் நாயகம் | - தகவலுக்காக மற்றும் உரிய நடவடிக்கைக்காக |
| 02. | பிரதான உள்ளக கணக்காளர் | |
| 03. | அனைத்து வலய பொறுப்பு பிரதி/ உதவி பதிவாளர் நாயகங்கள் | |
| 04. | வலய பொறுப்பு உதவி பதிவாளர் நாயகங்கள் | |
| 05. | தலைமை அலுவலகத்தின் அனைத்து பதவிநிலை அலுவலர்க்ள | |
| 06. | செயலாளர், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் | - அங்கத்தவர்களுக்கு அறிவிப்பதற்காக |